செ.வெ.எண்: 425 நாள்: 27.07.2026

**புதுக்கோட்டை மாவட்டம்**

**முன்னாள் படைவீரரைச் சார்ந்தோர்களுக்கு 2026-2027ஆம் ஆண்டுக்கான மருத்துவப் படிப்பிற்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

முன்னாள் படைவீரரைச் சார்ந்தோர்களுக்கு 2026-2027–ம் ஆண்டுக்கான மருத்துவப் படிப்பிற்கு கேந்திரிய சைனிக் போர்டு (KSB) www.ksb.gov.in என்ற இணையதளத்தில் 21.7.2026 முதல் 28.08.2026 வரை விண்ணப்பிக்கலாம். இப்படிப்பிற்கு விண்ணப்பித்திட முன்னாள் படைவீரரைச் சார்ந்தோர்கள் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் தகுதிச் சான்று பெறுதல் வேண்டும். இச்சான்றினைப் பெறுவதற்கு கீழ்க்காணும் ஆவணங்களுடன்

1. மதிப்பெண் சான்றின் நகல்
2. சிறாரின் பெயர் படைவிலகல் சான்றில் இல்லை எனில், பார்ட் -II order (அ) மாற்று சான்று நகல் இணைக்க வேண்டும்.
3. நீட் தேர்வின் மதிப்பெண் சான்று

முன்னாள் படைவீரரின் அசல் படைவிலகல் சான்று, முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, ஓய்வூதிய கொடுப்பாணை நகல் மற்றும் முன்னாள் படைவீரர் சான்று பெற வேண்டிய மகன் / மகளுடன் புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரில் அணுகி தகுதி சான்று பெற்று பயனடையலாம்.

2026-2027 கல்வியாண்டின் மருத்துவ படிப்பிற்கு விண்ணப்பிக்கும்போது இதற்கு முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தகுதிச் சான்றினை பயன்படுத்தக் கூடாது. புதியதாக தகுதி சான்று பெற வேண்டும் .

மேலும் விபரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தின் 04322-236593 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai